# தமிழ்த் தொண்டு என்னும் நாடகம்

# Tamizh Thondu – An Overview

முனைவர் உமா அழகிரி

Dr Uma Allaghery

**"TAM 2001 Y (3): Unit 8.2 Tamizh Thondu – An Overview" by Dr Uma Allaghery, Mahatma Gandhi Institute is licensed under CC BY 4.0**

......................................................................................................................................

இந்த நாடகத்தை எழுதியவர் **டாக்டர் ஆறு. அழகப்பன்**.

**நாடகச் செல்வம்** என்னும் நூலில் இந்த நாடகம் இடம்பெறுகிறது.

**தமிழ்த்தொண்டு என்னும் நாடக உறுப்பினர்கள்:**

1. **கபிலர்**: இவர் பெருந்தமிழ்ப் புலவர்
2. **நப்பசலையார்**: இவர் ஒரு தமிழ்ப் பெண் புலவர்
3. **பிரகதத்தன்**: இவர் ஓர் ஆரிய அரசன்; இவருக்கு இன்னொரு பெயர் யாழ்ப் பிரகதத்தன்
4. **மகரம்**: வடநாட்டுச் செம்படவப் பெண்

**நாடகத்தில் உள்ள காட்சிகள்**: 5

**நாடகத்தில் குறிப்பிட்டுள்ள இடங்கள்**:

- திருக்கோவிலூர், பெண்ணை ஆற்றங்கரை
- ஆரிய அரசன் பிரகத்தன் வாழும் இடம்
- பிரகதத்தன் வாழும் இடத்தில் காணப்படும் மண்டபம்

## காட்சி 1

- **நாடக உறுப்பினர்கள்:**

கபிலர், நப்பசலையார், பிரகதத்தன், மகரம்

- **இடம்:** திருக்கோவிலூர், பெண்ணை ஆற்றங்கரை

## காட்சி அமைப்பு:

கபிலர் பாரியுடைய மகளிரின் திருமணத்தைச் செய்து கொடுத்தவுடன் மனச்சுமை நீங்கிய உணர்வு பெற்று இறப்பைத் தழுவ நினைத்தார்.

பெண்ணை ஆற்றங்கரையில் இந்த உலக வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற வடக்கிருந்தார்.

- உயிர் துறக்கும் எண்ணத்தைக் கபிலர் விட்டுவிட வேண்டும் என்று மக்கள், புலவர்கள், நண்பர்கள் அனைவரும் அவரிடம் கெஞ்சினார்கள்.
- ஆனால், அவர் அவர்களுடைய பேச்சைக் கேட்கவில்லை.
- அவர் வடக்கிருந்தபோது, ஒரு நாள் மாலையில் ஆற்றங்கரையில் ஒரு பெண் வருவதைப் பார்த்தார்; வந்த பெண் நப்பசலையார் என்பவர் ஆவார். அவருக்கும் கபிலருக்கும் இடையில் உரையாடல் நிகழ்ந்தது.
- உலகத்தாரின் சார்பாகக் கபிலர் தம் உயிர் துறக்க எடுத்த முடிவைக் கைவிட்டு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நப்பசலையார் வந்திருந்தார்.
- கபிலர் தமக்குப் பெற்றுள்ள புகழைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். நப்பசலையாரரின் பேச்சுக்கு இணங்க அவர் நடந்துகொள்ளவில்லை. "இறப்பு என்னை இன்றைக்குத் தழுவாவிட்டாலும் இன்னும் சில தினங்களில் தழுவிடலாம்," என்று உரைத்தார்.
- நப்பச்சலையார் அங்கிலிருந்து கிளம்பிய பிறகு கபிலர் பறம்பு மலையையும் பாரியையும் அவருடைய மகளிரையும் நினைத்துக்கொண்டிருந்தார்.
- அப்போது ஆண் மகன் ஒருவனும் பெண் மகள் ஒருத்தியும் களியாட்டத்தில் ஈடுபட்டிருந்ததைக் கண்டார்.
- சிறிது நேரத்துக்குப் பிறகு அந்தப் பெண் ஆபத்தில் இருந்தாள்; தன்னைக் காப்பாற்ற உதவி கேட்டாள்; கபிலர் அவளைக் காப்பாற்றினார்; அவள் வடபுலத்துப் பெண்; அவள் பெயர் மகரம்; செம்படவ இனத்தைச் சேர்ந்தவள்; அவளுக்கு அம்மா இல்லை; அவளுடைய அப்பா படகு செலுத்துவதில் புகழ்

பெற்றவர்; தன்னோடு வந்த ஆண் அரச குலத்தைச் சேர்ந்தவன்; அவன் பெயர் பிரகதத்தன்; அவனும் வடபுலத்தைச் சேர்ந்தவன்; அவள் (மகரம்) பிரகதத்தனின் மனைவி அல்லள்; அவன் விரும்பியவளை அழைத்து வருவான்; காந்தர்வ மணம் (களவு மணம்) செய்து கொள்வான். ஆசை தீர்ந்தவுடனே இப்படியே விட்டுச்சென்று விடுவான். இது அவனுடைய வழக்கம். மகரத்தைப் பிரகதத்தின் மனைவி ஆக்குகிறேன் என்று கபிலர் மகரத்திடம் கூறியுள்ளார். தமிழ் மண்ணில் உள்ள மரபைப் பற்றி அரசன் பிரகதத்தனிடம் விளக்கம் கொடுக்கப்போவார் என்று வாக்கு அளித்தார் கபிலர்.

## காட்சி 2

- **நாடக உறுப்பினர்கள்:**

கபிலர் மற்றும் ஆரிய அரசன் பிரகதத்தன்

- **இடம்:** ஆரிய அரசன் பிரகதத்தன் வாழும் இடம்

### காட்சி அமைப்பு:

கபிலர் பிரகதத்தன் வாழ்ந்த இடத்தை அடைந்தார். அவன் இலக்கணப் பிழை இல்லாமல் யாழை வாசித்துக்கொண்டிருந்தான். கபிலர் அதை மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

- அவன் யாழை வாசித்த பிறகு, கபிலர் என்பவர் யார் என விசாரித்தான். தம்மைப் பற்றி இந்தத் தமிழ் மண்ணில் அறியாதவர் உள்ளனர் என அறிந்துகொண்ட கபிலர் வியந்தார். அதனால், தம்மை அறிமுகம் செய்து பாவை ஒருத்திக்காகத் தூதுவனாக வந்திருந்தார் எனப் பிரகதத்தனிடம் கூறினார். மகரம் என்பவளின் சார்பில் வந்திருந்தார் எனக் கேள்வியுற்ற அரசனுக்குக் கோபம் ஏற்பட்டது. ஆனால், கபிலர், இது தமிழ் நிலம். இந்நிலத்துக்கு ஓர் உயரிய ஒழுக்கம் உண்டு. இலக்கணமும் இலக்கியமும் உண்டு. அவற்றிற்கு மாறாக எது நடந்தாலும் தடுத்து நிறுத்தத் தமிழ்ப் புலவரான கபிலருக்கு உரிமை உண்டு எனப் பிரகதத்தனிடம் கூறினார்.

- பிரகதத்தன் கபிலரின் பேச்சை மறுத்தான்; ஆனால் கபிலர் மன உறுதியுடன், “தமிழ் நிலத்தில் நிரந்தரக் குடிமகனாக வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் தமிழ் வாழ்வியலுக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும்,” என்று எடுத்துரைத்தார். கடைசியில் அவன் கபிலரின் விளக்கத்தைக் கேட்க ஒப்புக்கொண்டான். கபிலரை நன்கு உபசரித்தார்; மேல் மண்டபத்தில் தங்கித் தமிழ் மரபைப் பற்றி எழுதச் சொன்னான்.

## காட்சி 3

- **நாடக உறுப்பினர்கள்:**

கபிலர், ஆரிய அரசன் பிரகதத்தன், வடமொழிப் புலவர், சில ஆரிய அலுவலர்கள்

- **இடம்:** ஆரிய அரசன் பிரகதத்தன் வாழும் இடத்தின் மேல் மண்டபம்

### காட்சி அமைப்பு:

கபிலர் பிரகதத்தன் வாழ்கின்ற இடத்தின் மேல் மண்டபத்தில் ஒரு பலகையில் உட்கார்ந்திருந்தார். அப்போது முழு நிலவு ஒளி இருந்தது. அவர் அங்கு உள்ளவர்களிடம் தமிழர் பண்பாட்டைப் பற்றி எடுத்துக் கூறினார்.

- கபிலர் ‘குறிஞ்சிப்பாட்டு’ என்னும் நெடும்பாடலைப் பாடியுள்ளார். அதில் உள்ள தமிழகத்தின் பண்பாட்டைப் பற்றி அங்குள்ளவர்களுக்கு விளக்கினார்.
- ஐந்து வகை நிலங்களின் பிரிவுகளைப் பற்றி விளக்கம் தந்துள்ளார்; நிலத்தையும் பொழுதையும் குறித்த முதற்பொருள் என்பதன் விளக்கம் என்றும் தந்துள்ளார்; கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் என்பவற்றின் விளக்கங்களைத் தந்துள்ளார்; குறஞ்சித் திணையைப் பற்றி விளக்கம் தந்த பிறகு அறத்தொடு நிற்றல் என்பதற்கான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.
- கபிலர் களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை ஆகியவற்றின் விளக்கமும் தரப்பட்டுள்ளது; குறிஞ்சித் திணையில் உள்ள பூ வகைகளைப் பற்றிக் கூறியுள்ளார்; குறுந்தொகைப் பாடல் ஒன்று சான்றாகக் கொண்டு தலைவன் மற்றும் தலைவியுடைய ஒத்த மனத்தைப் பற்றி விளக்கம் மேற்கொண்டு

தந்துள்ளார் கபிலர்; தலைமகளுக்குத் துன்பம் வரும்போதெல்லாம் தலைமகன் வந்து காப்பாற்றும் செயலைப் பற்றிய விளக்கம் தந்துள்ளார்.

- தலைமகள் தலைமகனுடன் கூடிய நிலை, இருவரும் பகல் பொழுதைக் போக்கிய வகை, தலைவனுடைய மாலைக் காலத்து வருகை, தலைமகளைப் பிரிந்த நிலை முதலிய செய்திகளுக்கு விளக்கம் தந்து, கபிலர் குறிஞ்சிப்பாட்டு என்னும் பாடலை முடித்துக்கொண்டார். பிரகதத்தன் மகரம் என்பவளோடு திருமணம் செய்ய ஒப்புக்கொண்டான்; வாக்குறுதி அளித்தான்.

## காட்சி 4

- **நாடக உறுப்பினர்:**

ஆரிய அரசன் பிரகதத்தன்

- **இடம்:** ஆரிய அரசன் பிரகதத்தன் வாழும் இடம்

### காட்சி அமைப்பு:

கபிலர் பிரகதத்தனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, குறிஞ்சிப்பாட்டு என்னும் பாடலை ஏட்டில் எழுதி வைத்து விட்டு, பெண்ணை ஆற்றங்கரைக்குச் சென்றுவிட்டார். பிரகதத்தன் ஓர் ஏட்டில் மகரத்தை நினைத்து ஒரு பாடலைப் (குறுந்தொகை 184) பாடினான். இதை ஆவலுடன் கபிலரிடம் காட்ட வந்தபோது, மேல் மண்டபத்தில் கபிலரைக் காணவில்லை; குறிஞ்சிப்பாட்டை மட்டும் இருந்ததைப் பார்த்து வருந்தி, குறிஞ்சிப்பாட்டையும் தான் எழுதியுள்ள பாட்டையும் கொண்டு பெண்ணை ஆற்றங்கரைக்கு விரைந்தான்.

## காட்சி 5

- **நாடக உறுப்பினர்கள்:**

மாற்றோக்கத்து நப்பசலையார்,மகரம், ஆரிய அரசன் பிரகதத்தன், மக்கள்

- **இடம்:** பெண்ணை ஆற்றங்கரை

### காட்சி அமைப்பு:

ஆற்றங்கரையில் மக்கள் கூடியிருந்தார்கள். அங்குத் தீயில் எரிந்த சாம்பல் கிடந்தது. அதன் அருகில் மகரம் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள்.

- கபிலர் தீக்குளித்துவிட்டார் என்ற செய்தி கேட்டதும் பிரகதத்தன் விம்மிவிம்மி அழுதான்; மகரம் தீக்குழியைச் சுற்றிவந்து வணங்கினாள்; அரசன் பிரகதத்தன் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டையும் தான் பாடிய பாடலையும் கைகளில் கொண்டு மீண்டும் அழுதான்.